**சுருக்கம்**

நெடுஞ்சாலைத் துறை – சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் – பெரியார் ஈ.வெ.ரா சாலையில் அமைந்தகரை அருகில் நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் அண்ணாநகர் மூன்றாவது நிழற்சாலையை இணைத்து மேம்பாலம் மற்றும் கீழ்பாலம் அமைத்தல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு1) துறை

அரசாணை (டி) எண்.222 நாள்: 18–11–2010,
கார்த்திகை – 2, திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்கப்பட்டது :–

தலைமைப் பொறியாளர் (நெ), பெருநகரம், கடித எண்.1810/உ.பொ–I/2008–09, நாள் 08–06–2010 மற்றும் 19–08–2010.

*******

**ஆணை :–**

சென்னை பெருநகர வளர்ச்சிப் பகுதிகளில் போக்குவரத்து கட்டமைப்பினை மேம்படுத்த ஒருங்கிணைந்த போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வு (CTTS) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினால் மேற்கொள்ளப்பட்டு நெடுஞ்சாலைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள சாலை கட்டமைப்புக்கு பல்வேறு பணிகளை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் பரிந்துரைத்தது. அதனடிப்படையில் பெரியார் ஈ.வெ.ரா சாலையில் அமைந்தகரை அருகில் நெல்சன் மாணிக்கம் சாலை சந்திப்பு மற்றும் அண்ணா நகர் 3வது நிழற்சாலை (அண்ணா வளைவு) சந்திப்புகளை இணைத்து மேம்பாலம் மற்றும் கீழ்பாலம் அமைக்க ரூ.117.00 கோடிக்கு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டது.

2. இக்கருத்துரு கடந்த 29–07–2010 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும பகுதியில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை முன்னுரிமை வரிசையில் இறுதி செய்யும் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு, செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

3. அதனடிப்படையில் தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) அவர்களின் கருத்துருவை நன்கு பரிசீலித்து அதனை ஏற்று பெரியார் ஈ.வெ.ரா. சாலையில் அமைந்தகரை அருகில் நெல்சன் மாணிக்கம் சாலை மற்றும் அண்ணாநகர் 3வது நிழற்சாலை (அண்ணா வளைவு) சந்திப்புகளை இணைத்து ரூ.117.00 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் மற்றும் கீழ்பாலம் அமைக்கும் பணியினை மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேற்கண்ட செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“5054 – சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு – 80 – பொது – 800, ஏனைய செலவு பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத் திட்டம் – JW – சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் – சென்னை மாநகரில் பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்தை மேம்படுத்துதல் – 16 பெரும் பணிகள்’’.
(த.தொகு. 5054–80–800–JW-1608)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ‘‘புதுப் பணி’’ (New Service) இனமாக கருதப்படும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency fund) முன் பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு–செலவு பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். ஏதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு–செலவு பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) நெடுஞ்சாலைத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலும், இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு. இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது–1) துறைக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (பெருநகரம்) நெடுஞ்சாலைத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா. எண்.65373 /பொ.ப I/2010–1, நாள் 18–11–2010 இல் பெறப்பட்ட இசைவின் படி கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1340 (ஆயிரத்து முன்னூற்று நாற்பது) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கோ. சந்தானம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தலைமைப் பொறியாளர், பெருநகரம், நெடுஞ்சாலைத் துறை, சென்னை–16. (3 நகல்கள்)
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
நிதி (பொ.ப–I / வ.செ. பொது I மற்றும் II) துறை, சென்னை–9.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
அரசு செயலாளரின் தனிச் செயலர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9
துணைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–9.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
தேசிய தகவல் மையம் (NIC), சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.